**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா.12** **Date : 01.08.2025.**

| | |
|---|---|
| **Name : பிரகாஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நான் கடந்த 02.08.2019 தேதியன்று இரவு 11 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த போது முதல்நிலை காவலர் திரு.பாபு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் மீது மேச்சேரி காவல் நிலைய குற்ற எண்.318/2019 **u/Sec. 294(பி), 332, 353, 506(2) IPC** பதிவு செய்தேன்.

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) நான் எத்தனை மணிக்கு புகாரை பெற்று எத்தனை மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் என்றால் 02.08.2019ம் தேதி இரவு 11 மணிக்கு சம்பவம் நடந்தவுடனே கொடுத்தார்கள். எதிரி ராணுவத்தில் பணியில் உள்ள நபர் என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் ராணுவத்தில் எதிரி பணிபுரிவதால் அவருடைய மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் கொடுத்தேனா என்றால்

இல்லை. என்ன காரணத்திற்காக கொடுக்கவில்லை என்றால் அவர் குடிபோதையில் இருந்ததால் சட்ட ஒழுங்கிற்கு விரோதமாக இருந்ததால் கொடுக்கவில்லை. ராணுவத்தில் தகவல் கொடுக்காததற்கு காரணம் அவர் பணிபுரியும் இடம் குறித்து அடையாளம் ஏதும் தெரியாததால் கொடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதியும் போது ராணுவ வீரர் என தெரியாமல் போட்டோமா என்றால் ராணுவ வீரர் என்று தெரியும்.

4) ராணுவ வீரர் என்று தெரிந்து கொண்டு எங்கு பணிபுரிகிறார் என்பதை அறிய எந்த நடவடிக்கை எடுத்தேன் என்றால் எதிரியை விசாரித்த போது அவர் மதுபோதையில் இருந்ததால் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. மேச்சேரி டவுனில் குடியிருக்கிறார் என்று தெரிந்த நிலையில் அவரது உறவு முறைகளிடம் விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரை பெற்று அந்த புகாரின் தன்மையை ஆராய்ந்த போது கைது செய்யப்படக்கூடிய குற்றம் இருந்ததால் நான் உடனடியாக வழக்கு பதிவு செய்தேன்.

5) உண்மையான ராணுவ வீரரா என தெரிந்து கொண்டேனா என்றால் அவர் ஒத்துழைக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்னர் உறவினர்களை அணுகி ராணுவ வீரர் தானா என விசாரிக்க முயற்சிக்கவில்லை என்றால் ஆமாம். பாபு, பழனிசாமி, குருசாமி மூவரில் யார் பேருந்து நிலையத்தில் சம்பவம் நடப்பதாக தெரிவித்தார்கள் என்றால் பாராகாவலர் திரு.ரவிக்குமார் என்பவர் தகவல் சொன்னார்.

6) யார் யாரை அடித்ததாக புகாரில் உள்ளது என்றால் குருசாமி, பழனிசாமி ஆகியோரை தாக்கியதாக உள்ளது. அவர்களை விசாரித்து தான் வழக்கு பதிவு செய்தேனா என்றால் ஆமாம். குருசாமி, பழனிசாமி உதவி ஆய்வாளர்கள் கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அங்கு பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தனர் அவர்களில் யாராவது புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. நவீன், அவரது சகோதரர் மேச்சேரி பஸ் ஸ்டான்ட் பைக்கில் வந்த போது ராணுவ வீரர் வாகனத்தின் மீது மோதியதால் ராணுவ வீரர் கீழே விழுந்துவிடுகிறார். ராணுவ வீரர், நவீன், அவரது சகோதரர்

ஆகியோருக்கு இடையே பிரச்சனை ஏற்படுகிறது. அதன் பின்னிட்டு நவீன், அவரது சகோதரர் மேச்சேரி சேர்மன் ராஜாவின் மகன்கள் என்பதால் அரசியல் செல்வாக்கு காரணமாக டீ கடையிலிருந்த ராணுவ வீரர் மீது குடிபோதையில் இருந்ததாக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை. ஓம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.